புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# விஜயா இதழ்வழி புதிய பத்திரிக்கைச் சட்டம்

பா.கண்ணன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641046

ஆய்வுச்சுருக்கம்

இந்திய விடுதலைப் போராட்டக் காலகட்டத்தில் மக்களிடம் ஆங்கில அரசின் நடவடிக்கைகளையும், நாட்டின் நிலையையும் அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் கருவியாக இருந்தவை இதழ்களாகும். அவ்விதழ்களின் துணைகொண்டு இதழாசிரியராகப் பணியாற்றிய மகாகவி பாரதியார் மக்களின் உள்ளத்தில் விடுதலையுணர்வையும் சுதந்திர உணர்வையும் ஏற்படுத்தும் சுதேசி இதழ்களுக்கு ஆங்கில அரசு தடை விதிக்கப் புதிய பத்திரிகைச் சட்டம் எனும் இந்நடவடிக்கையைச் செயல்படுத்தச் சட்டசபையில் மசோதாவை நிறைவேற்ற முற்பட்டது. சுதேசி இதழ்களை ஒடுக்கி வாய்ப்பூட்டுப் போடும் இச்சட்டத்தை எதிர்த்து பாரதியார் தான் பணியாற்றிய விஜயா இதழின்வழி விளக்குவதாக இவ்வாய்வு அமைகிறது.

## முன்னுரை

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டவும் ஆளும் வர்க்கத்தின் அநீதிகளை எடுத்துரைக்கவும் மக்களை எழுச்சியுறச் செய்யவும் இதழ்கள் பெரும் பங்காற்றியுள்ளன. அவற்றில் இதழாசிரியராக 1904 இல் உருவாகிய பாரதி தன் இறுதி நாள் வரை இதழாசிரியர் பணியை செய்து இதழாசிரியராக தன் வெற்றி கொடியை நாட்டினார். இவருடைய படைப்புகள் அந்நியரை அச்சுறுத்தியது. சென்னையில் இருக்கும்பொழுது பல செயல்கள் செய்து அவரை கைது செய்யும் அளவுக்கு தன் படைப்பினை படைத்தும் மேலும் சில காரணங்களாலும் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் பாரதியை அவரது நண்பர்கள் புதுவைக்கு அனுப்பினர். புதுவை சென்று அங்கு ஏதும் செய்ய இயலாது என நினைத்தவர்களை மேலும் அச்சுறுத்த தொடங்கியது அவரது புதுவை படைப்புகள். ஏனென்றால் பாரதி புதுவை சென்ற சிறிது நாட்களிலேயே இந்தியா அதனைத் தொடர்ந்து விஜயா, சூரியோதயம், கர்மயோகி, பாலபாரதா போன்ற பல இதழ்களில் பணியாற்றத் தொடங்கினார். அவை ஒவ்வொன்றும் வார இதழ் மற்றும் நாளேடாக வெளியிட்டு தன் எதிர்ப்புகள் மூலம் பிரெஞ்சு ஆட்சியிலிருந்து ஆங்கில ஆட்சியை அச்சுறுத்தினார். இதனை ஒடுக்க ஆங்கிலே அரசு புதிய பத்திரிக்கைச் சட்டத்தினைக் கொண்டு வந்து அவரை முடக்க நினைத்தனர். இதனையறிந்த மகாகவி தன்னுடைய இதழ்களில் தனது எதிர்ப்பைச் சுட்டிக்காட்டினார். அவ்வகையில் பாரதி விஜயா இதழில் புதிய பத்திரிக்கைச் சட்டம் சார்ந்த எதிர்ப்பை எத்தன்மையில் பதிவிட்டுள்ளார் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு கருதுகோள்

பாரதி பணியாற்றிய விஜயா இதழின் வழி நின்று புதிய பத்திரிகை சட்டத்தின் பாதிப்பை விவரிக்கின்றார் என்பது இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றது.

ஆய்வு அணுகுமுறை

- தொகுப்புமுறை ஆய்வு
- விளக்கமுறை ஆய்வு
- பகுப்புமுறை ஆய்வு

புதுவையில் விஜயா

விஜயா இதழும் சென்னையிலிருந்து பாரதியோடு புதுச்சேரிக்கு வந்து அங்கிருந்து வெளியாகத் தொடங்கியது. பாரதியார் ஆசிரியராக இருந்த ஒரே நாளிதழ் விஜயா. 1909 – 1910ஆம் காலகட்டத்தில் புதுச்சேரியிலிருந்து வெளிவந்தது. பாரதியார் நடத்திய இதழ்கள் அனைத்தும் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் அவரது கருத்துக்களை, கட்டுரைகளைத் தாங்கி வந்த ஒரே இதழாகும்.

விஜயா பத்திரிகையில் மகாகவி பாரதியார் உலக நாடுகளில் நிலவிய பிரச்சினைகளைக் குறித்து கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இந்தப் பத்திரிகையின் முதல் பக்கத்தில் விஜயா என்று பெரிய எழுத்துக்களால் தலைப்பு காணப்படுகிறது. அதன் கீழே ஆங்கிலத்திலும் VIJAYA என எழுதப்பட்டிருக்கிறது. தலைப்பில் 'ஸ்வதந்திரம், ஸமத்துவம், சகோதரத்துவம்' என்று காணப்படுகிறது. இதன் ஃப்ரெஞ்சு வடிவத்தையும் மேற்புறத்தில் காணலாம். இப்பத்திரிகை பிரதி தினம் மாலையில் பிரசுரிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. இவற்றில் அரசியல் சமுக கருத்துகள் சார்ந்த கட்டுரைகள் வெளியிட்டு மக்களால் மிகவும் விரும்பி படிக்கப்பட்ட இந்த இதழ் 1910-ம் வருஷம் பத்திரிகைகள் சட்டம் பிரிவு 4, உட்பிரிவு 1ன் படி தடை செய்யப்பட்டது. அதுமுதல் இந்த இதழ் நிறுத்தப்பட்டு விட்டது.

விஜயாவில் பத்திரிகைச் சட்டம்

புதிய பத்திரிக்கைச் சட்டம் ஆங்கிலேய ஆட்சியரான மீண்டோ பிரபு இந்திய பத்திரிகைச் சட்டம் என்ற பெயரில் புதிய பத்திரிக்கைச் சட்டம் 1910 ஆம் ஆண்டு வெளியிடுவதாக உள்ளது. இதனை எதிர்த்து பாரதி அவர் இதழ்களில் பலவாறு தன் எதிர்ப்புகளைத் தெரிவித்தார். அவற்றில் விஜயா நாளேட்டில் புதிய பத்திரிக்கைச் சட்டத்தினைப் பற்றி வெளியிட்டு மக்களுக்கு எவ்வழிகளில் அறிவு ஊட்டுகிறார் என்பதைக் காணலாம்.

03.02.1910 நாளில் புதிய பத்திரிக்கைச் சட்டம் என்னும் கட்டுரையில் இந்தியாவில் சுதேச இதழ்களுக்கு சுதந்திரம் இல்லாமல் போனதைப் பற்றிய கருத்துகளை இச்செய்தி முன்வைக்கிறது. சுதந்திரத்தைப் பற்றி பேசும் இதழ்களின் கணக்கு புத்தகங்கள், கடிதங்கள், சந்தாதாரர்களின் பட்டியல் போன்றவற்றை ஆங்கிலேய அரசாங்கம் பறிமுதல் செய்வதைச் சுட்டிக்காட்டியுள்ளார். பத்திரிக்கைச் சட்டம் புதிய மாறுதல்களைக் கொண்டு பரிணாமம் அடைவதையும் வெளிக்கொணர்ந்தவர். முதலில் ஆவணங்களை பறிமுதல் செய்தல்; அச்சுக்கூடங்களுக்கு சீல் வைத்தல்; இதழாசிரியர்களைக் கைது செய்தல் போன்றவை நிகழ்ந்தேறின என்பதை குறிப்பிடுகிறார். இதுபோலவே 1908ஆம் வருடம் ஒரு பத்திரிகைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அது மிகக் கொடுமையுடையது. அதில் கொண்டிருக்கும் பிரிவுகள் ஆபத்தானவைகள் அதன்படி அரசாங்கம் குற்றச்சாட்டும் எந்த இதழும் அப்பொழுதே மூடி விடுவதுடன் அந்த அச்சு கூடத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டனர். "கல்கத்தா வந்தே மாதரம் முதலான அநேக இதழ்கள் அச்சுக்கூடங்களை ஆங்கிலேய அரசாங்கம் கைப்பற்றி கொண்டு அவற்றையும் அடக்கி விட்டனர்."[1] தற்போதைய சூழலில் இதழ்களுக்கு தடை செய்ய அவர்களிடம் இருந்த இரண்டு வழிகளில் ஒன்று பரிசோதகரை ஏற்படுத்துவது மற்றொன்று இதழ்கள் வெளியிடுவதற்கு உத்தரவு கொடுக்காமல் இருத்தல் என்பதாகும். பரிசோதகர் வைத்து இதழ்களை வெளியிடுவது என்பது அரசாங்கத்திற்கு சாதகமான செய்திகளை மட்டுமே வெளியிடுவது போன்றதாகும். ஆங்கில அரசாங்கத்தின் செய்திகளை மட்டும் வெளியிட்டு மக்களின் எண்ணங்களை ஒதுக்குவதாக அமையும் இதழால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. புதிய பத்திரிகைச் சட்டத்தின் மூலம் நாம் சுதந்திரத்தை விட்டு அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் நுழைவதை பாரதி கட்டுரை மூலம் சுட்டிக் காட்டுகிறார்.

*“ஒரு பரிசோதகரின் அபிப்பிராயத்தை மாத்திரம் வெளியிட்டால் அது கேவலம் ஸ்ர்க்காரின் அபிப்பிராயமேயொழிய ஜனங்களின் பொது அபிப்பிராயமல்லவென்பது எல்லாரும் அறிந்து கொள்ளக்கூடியதே.”*[2]

*05.02.1910 அன்று புதிய பத்திரிகைச் சட்ட மசோதா, இந்தக் கட்டுரையில் புதிய பத்திரிக்கைச் சட்டம் என்பது ஆங்கில அதிகாரிகளின் அலட்சியப் போக்குகளையும் கொடுஞ்செயல்களையும் வெளிக்காட்ட விடாமல் செய்து விடும் என்பது திண்ணம். அத்தகைய பத்திரிகைச் சட்டம் ஏற்படக்கூடாது என்பது மகாகவி கருத்து. அவரது காலத்திற்கு முன்பு 75 ஆண்டுகளுக்கு முந்தைய ராஜா ராம்மோகன்ராய் அவர்கள் இங்கிலாந்து அரசருக்கு எழுதிய கடிதத்தை முன்வைத்து புதிய பத்திரிகைச் சட்டத்தை மறுக்கிறார். “அந்த வார்த்தைகள் 75 வருஷங்களுக்குப் பிற்பாடுங்கூட தற்காலத்தின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் செய்கைகளுக்கு எவ்வளவு பொருத்தமான மறுமொழியாய் இருக்கிறது. பாருங்கள்! மஹான்களின் வாக்கியங்களுக்கு என்றைக்கும் மஹிமையே.”[3] இதழ்கள் நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு ரொக்க ஜாமின் கட்டிவிட்டு நடத்த வேண்டும் என்ற சட்டம் ஏற்படின் அதனினும் இழிவு வேறேதுமில்லை. ஆங்கில அரசின் அலட்சிய போக்குகள் உண்மையை வெளிக்கொணரவிடாமல் செய்யும் பத்திரிகைச் சட்டம் பயனற்றதாகும் என்கிறார் நம் பாரதியார்.*

*“இந்தப் புதிய பத்திரிகை மசோதா மாத்திரம் சட்டமாக்கப்பட்டுவிட்டால், மனதில் கள்ளமில்லாமல் நிஷ்களங்கமாய் அதிகாரிகளின் கொடுஞ்செயல்களைக் கண்டித்து, பொது ஜனங்களின் வாஸ்தவமான அபிப்பிராயங்களை பஹிரங்கமாய் வெளியிட முடியாது.”*[4]

*08.02.1910 அன்று ஸ்ரீ.ஜி.எ.நடேசய்யரும் சென்னை டைம்ஸ_ம் கட்டுரையில் புதிய பத்திரிகைச் சட்டத்தையும் ஆங்கிலேய அரசையும் ஆதரிக்கும் சென்னை டைம்ஸ் பத்திரிகையைப் பற்றிய விமர்சனமாகும். இந்தியர்களை ஐரோப்பியர்களாக மாற்றுவதே சென்னை டைம்ஸ் இதழின் சீர்திருத்தமாகக் கொள்ளப்படும். சென்னை டைம்ஸ் இதழ்களில் இரண்டு ஆப்தர்களில் பம்பாயில் இருக்கும் பார்ஸி இதழின் நடவடிக்கைகளைப் பற்றி கடும் எதிர்ப்பினை பாரதியார் பதிவிட்டுள்ளார். அடிக்கும் பொழுது அழும் உரிமை யார் கொடுத்தது என்பது போல அப்பீல் செய்யும் உரிமையை மற்ற இதழ்களுக்கு இருக்கக் கூடாது என்பது பார்ஸி இதழின் கருத்தாகும். அதேபோலவே இந்தியன் ஸோஷியல் ரிபார்மர் பத்திரிகை புதிய பத்திரிகைச் சட்டத்தை புகழ்ந்து வரவேற்றுள்ளது. இப்பத்திரிகை சென்னை டைம்ஸ் இதழின் மற்றொரு ஆப்தர் ஆகும்.*

*“பம்பாயில் பிரசுரமாகும் சில பத்திரிகைகள் மானமில்லாமல் கவர்ன்மெண்டுக்குப் பின்பாட்டுப் பாடுகின்றன. அவைகளைப் போல் மானமிழக்காததே ஸ்ரீ.ஜி.எ.நடேசய்யரின் பிழை.”*[5]

*14.02.1910 நாளில் புதியப் பத்திரிகைச் சட்டம் என்னும் கட்டுரையில் ஜனங்களுக்கு எவ்வித பயனும் ஏற்படுத்தாமல் தீங்கினைச் செய்யும் பத்திரிகைச் சட்டத்தைத் தடுத்து மெம்பர்கள் பேசியபோது N.சுப்பாராவ் பேசாமல் அமைதி காத்ததைச் சுட்டுகிறார். “இவர் இம்மசோதா சட்டமாகும்போது அக்கூட்டத்திற்கு விஜயஞ்செய்யாததின் காரணத்தை அவரை ஓர் ஜனப்பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தவர்களே கேட்கத் தக்கவர்களாவார்கள்.”[6] அரசாங்கப் பதவிகளைப் பெற சிலர் நடித்தும் பொருள், பெரும் பணம் போன்றவை செலவிட்டும் அப்பணியைப் பெறுகின்றனர். அவ்வழியில் பதவிகளுக்கு வருபவர்கள் ஜனங்களுக்கு நன்மை செய்வார்களா என்பதை கேள்விக்குறியாகவே உள்ளது. சட்டசபையில் உள்ள மெம்பர்கள் அவர்களை தேர்ந்தெடுக்கும் தேசத்தார் சந்தோஷம் கொள்ளும் வகையில் செயல்பட வேண்டும் என்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவிகளுக்கு வருபவர்கள் இனியேனும் புதிய பத்திரிகைச் சட்டத்தை பற்றி பேசாமல் இருப்பது அவரது பெருமையை நிலைநாட்டச் செய்யும் எனக் கட்டுரை வழி பாரதியார் அறிவுறுத்துகிறார். “இனியாவது தற்காலம்தான் மேற்படி மசோதாவைப் பற்றி பேசாமலிருப்பது அபகீர்த்தி சம்பாதித்தை பறக்கடித்து தேசத்திற்குச் சேவைசெய்து பெருமையடைவார் என்று நம்புகிறோம்.”*[7]

*23.02.1909இல் ஸ்வேதேச பத்திரிகை மசோதா என்ற கட்டுரையில் வெளியிட்ட செய்தியானது, ஸ்வேதேச பத்திரிக்கை மசோதா சட்ட புத்தகத்தில் இடம்பெற்றதைப் போல புதிய பத்திரிகை சட்டமும் இடம்பெற்று விடக்கூடாது என்பதை முன்னிறுத்தி எழுதிய கட்டுரையாகும். இது ஸ்வேதேச பத்திரிகை மசோதாவின் படி 47 பத்திரிகைகள் குற்றம்சாட்டி தடை செய்யப்பட்டுவிட்டன. அரசை கண்டித்து எந்தவொரு செய்தியையும் பத்திரிகைகள் வெளியிடக்கூடாது. அவ்வாறு வெளியிட்டால் முதல் தடவை பத்திரிகை ஆசிரியர் அவரது*

*நன்னடத்தைக்கு ஜாமீன் தர வேண்டும்; இரண்டாவது முறை குற்றம் செய்தால் அச்சு இயந்திரம் அச்சுக்கூடம் உட்பட அனைத்தும் சீல் வைக்கப்படும் மேலும் குற்றம் சாட்டப்பட்டால் ஆசிரியர் தனது அனைத்து சொத்துக்களையும் இழக்கும் நிலை ஏற்பட்டு விடும். ஒழுக்கம் இல்லாத இடத்தில் ஒருவன் ஒழுக்கம் தவறியதாக சொல்லி குற்றம் சுமத்த முடியாதது போல மதிப்பில்லாத இடத்தில் புதிய சட்டப்பிரமாணங்களை ஏற்படுத்துதல் முறையன்று. மக்களின் உணர்வுகளையும் குறைகளையும் வெளிப்படுத்தாத பத்திரிகைகளைவிட ஆங்கில அரசின் புகழ்பாடும் பத்திரிகைகள் உயர்ந்த நிலையில் உள்ளன என்பது வருந்தத்தக்கது என பாரதியார் குறிப்பிடுகிறார். "பரதேச கவர்ன்மெண்டாரும் ஸ்வதேச ஸ்வதந்திர பத்திரிகைகளும் பொருந்தாதவைகள். இப்படியே சில காலம் கழிந்தால் பத்திரிகைகளைச் சர்க்கார் நிறுத்தி விடுவார்கள். இல்லாவிடில் பத்திரிகைகள் கவர்ன்மெண்டார் வாயையடக்கிவிடும்."[8]*

*பாரதி ஆங்கிலத்தில் The New Press Act என 15.04.1910 விஜயாவில் எழுதியதை அரசு வாராந்திர அறிக்கையில் மொழிபெயர்ப்பு செய்துள்ளனர். அதில் லார்டு மார்லி பிறபித்த புதிய பத்திரிகைச் சட்டம் பிரஞ்சு ஆட்சியிலிருந்து கேட்கும் பொழுது ஆச்சரியமடைச் செய்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். சிறிது காலத்திற்கு முன்பு லார்டுமார்லி அரசாங்கம் நிர்வகிப்பதில் இந்தியர்களுக்கு அதிக அதிகாரம் தருவார் என வதந்தி நிலவியது. ஆனால் இது போன்ற சட்டங்கள் இயற்றுவதால் இந்தியாவில் உள்ள இதழ்களை எல்லாம் ஒடுக்குவது தான் லார்ட் மார்லியின் லட்சியம் எனத் தோன்றுகிறது. மேலும் "பால் மால் கெஜட்டில் லார்ட் மார்லி எழுதியதை இந்தப் புதிய சட்டத்தோடு ஒப்பிட்டால் பால் மால் கெஜட்டுக்கு எழுதியவர் பார்லி என்ற பெயர் தாங்கிய வேறு மனிதர் என்று தோன்றும்"[9] எனச் சுட்டிக்காட்டி இதுபோன்ற சட்டங்கள் பிரெஞ்சு ஆட்சியில் இல்லாததால் மகிழ்ச்சி அடைகிறோம் என்றும் பிரெஞ்சு ஆட்சியில் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற கொள்கைகள் கடைபிடித்து அவர்களுக்கான சட்டங்களை அவர்களே இயற்றிக் கொள்கின்றனர் என ஆங்கில ஆட்சிக்கும் பிரெஞ்சு ஆட்சிக்கும் உள்ள சுதந்திரத்தை வெளிக்காட்டியிருக்கிறார்.*

*முடிவுரை*

*ஆங்கில ஆட்சியின் கீழ் இந்தியா நாடு இருந்த நிலையில் பிரெஞ்சு ஆட்சியின் கீழ் புதுவையிலிருந்து பாரதியார் தன் படைப்பின் வழி புரட்சிகளைச்செய்து வந்ததாக லார்டு மார்லியின் புதிய பத்திரிக்கைச்சட்ட மசோத நிறைவேற்றி இதழ்களின் சுதந்திரத்திற்கு தடை ஏற்பட்டதை தனது படைப்புகளின் வழி சாடுகிறார். அவற்றில் ஆங்கில அதிகாரிகளின் செயல்களை மக்கள் வெளிப்படுத்தாமலிருக்கச் செய்கிறது. ஆங்கிலேயரை எதிர்த்து உள்ள பத்திரிகைகளை தடைசெய்து பத்திரிகை நிறுவனத்திற்கு சீல் வைக்க உத்தரவிடுகிறது. மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்தாமல் ஆங்கிலேயரின் புகழை மட்டுமே பரப்ப பயன்படுத்தப்படுகிறது. பாரதி பணியாற்றிய விஜயா இதழின் வழி நின்று புதிய பத்திரிகை சட்டம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்ற கருதுகோளானது மெய்ப்பிக்கப்பட்டது.*

மேற்கோள்


1. ஆ.இரா.வேங்கடாசலபதி, பாரதி விஜயா கட்டுரைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில். 2017. ப. 88
2. மேலது, ப. 89
3. மேலது, ப. 94
4. மேலது, ப. 95
5. மேலது, ப. 102
6. மேலது, ப. 119
7. மேலது, ப. 120
8. மேலது, ப. 141
9. மேலது, ப. 375


********* ********* ********** ********* ********* ********** ********** **********